## புனித ஜஸ்டின், வேதசாட்சி

நற்கருணை திருவிருந்தில் யாவரும் அனுமதிக்கப்படுவதில்லை. நமது போதனையை உண்மையாக நம்புபவர்களும், பாவத்திற்கு ஒப்புரவு பெற்றவர்களும் கிறிஸ்துவில் திருமுழுக்கு பெற்றவர்களும் அனுமதிக்கப்படுகின்றனர். இதனை வெறும் சாதாரண உணவாகவும் பானமாகவும் கருதுவதில்லை. நமது மீட்புக்காக, இறைவார்த்தையால் மனுவுரு எடுத்த நமதாண்டவர் இயேசு கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் இது உருமாறுகிறது. உணவை மாற்றும் நற்கருணை செபம் நமது மீட்பர் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டது. உண்மையிலேயே இயேசுவின் சதையாகவும் இரத்தமாகவும் உருமாற்றப் பெற்ற உணவால், நமது இரத்தமும் சதையும் ஊட்டம் பெறுகின்றன.

## புனித அந்தியோக்கு இன்னாசியார்

“இந்த வாழ்வின் போது நாவிற்கு சுவை தரும் அழிந்து போகும் உணவை நான் சுவைக்க மாட்டேன். தாவீது குலக்கொடி இயேசு கிறிஸ்துவின் சதையான அப்பத்தையும் மாசற்ற அன்பான அவரது இரத்தமான பானத்தையும் நான் விரும்புகிறேன்”. (உரோமையர்க்கு எழுதிய கடிதம் 7:3 [கிபி110]).

“இயேசு கிறிஸ்து அருள் குறித்த புறம்பான கருத்துகள், இறை நாட்டத்திற்கு முரனானதாக இருப்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள். நற்கருணையைப் பெறுவதிலிருந்தும் செபத்திலிருந்தும் அவர்கள் விலகி இருக்கின்றனர். நமது பாவங்களுக்காக பாடுபட்ட நமது மீட்பர் இயேசு கிறிஸ்துவின் உடல்தான் நற்கருணை என்பதை ஏற்றுக் கொள்ள அவர்கள் மறுக்கின்றனர். தந்தையாகிய கடவுள் தமது நன்மைத்தனத்தால் அவரை உயிர்த்தெழச் செய்தார். கடவுளின் இந்த மாபெரும் கொடையை மறுதலிப்பவர்கள் அழிந்து போவார்கள்”( செர்நாட்ஸ்க்கு எழுதிய கடிதம் 6:2-7:1[கிபி110].

## புனித எரெனியஸ்

தந்தையாகிய கடவுளிடமிருந்து ஆண்டவர் வந்தவரில்லை என்றால், நம்மைப் போல் படைப்பான அவர், அப்பத்தை எடுத்து இது என் உடல் எனவும் கிண்ணத்தை எடுத்து எனது இரத்தம் எனவும் உறுதியாக கூற முடியுமா? (பொய்யுரைக்கு எதிராக எழுதிய கடிதம் 4:32-33[கிபி198].

“கிண்ணத்தில் இருப்பது தமது இரத்தம், இதிலிருந்து நமது இரத்தம் பாய்கிறது; அப்பம் தமது சொந்த உடல், நமது உடலுக்கு ஊட்டமளிக்கிறது. இரசமும் தண்ணீரும் கலந்த கிண்ணமும் அப்பமும் இறைவார்த்தையைப் பெறும் போது நற்கருணை அதாவது கிறிஸ்துவின் உடலாக மாறுகின்றன. இதிலிருந்து நமது உடல் வளர்ச்சியும் ஆதரவும் பெறுகிறது. சதை, கடவுளின் கொடையைப் பெறும் வாய்ப்பு இல்லை என அவர்கள் கூறுகின்றனர். ஆண்டவரின் உடலாலும் இரத்தத்தாலும் ஊட்டம் பெறும் உடல், அவரில் ஒன்றாகிறது”(ibid.,5:2).

## புனித எருசல சிரில்

திருத்துவ திருமன்றாட்டுக்கு முன்பு, நற்கருணையின் அப்பமும் இரசமும், வெறும் அப்ப-இரசமாக மட்டுமே இருக்கிறது. ஆனால் திருமன்றாட்டுக்குப் பின் அப்பம் கிறிஸ்துவின் உடலாகவும் இரசம் கிறிஸ்துவின் இரத்தமாகவும் மாறுகிறது” (மறைக்கல்வி உரைகள் 19:7 [கிபி350]).

“எனவே அப்பத்தையும் இரசத்தையும் சாதாரணமாக நினைத்து விட வேண்டாம். குருவின் செபத்தால் கிறிஸ்துவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறுகிறது. உமது புத்தி ஏற்க மறுத்தாலும், விசுவாசத்தில் உறுதியாக இரு. சுவையால் தீர்மானிக்காமல், விசுவாசத்தால் முழுமையாக நிலைப்பெற்றிரு... சுவையால் அது அப்பமாக இருந்தாலும் அது அப்பமல்ல, பார்ப்பதற்கு அது இரசமாக இருந்தாலும் அது கிறிஸ்துவின் இரத்தம். அதில் பங்கு கொள்வது ஆன்மீக செயல், எனவே மகிழ்ச்சி கொள்”(ibid.,22:6,9).✢

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

NEWREC

27 ஆகஸ்ட்டு 2017
பொது காலம்
21ம் ஞாயிறு

# தொடக்க கால திருச்சபைத் தலைவர்கள் திவ்விய நற்கருணை பற்றி தெரிவித்த கருத்துகள்



BUL 35/2017



## மினவுதல் மாதா தேவாலயம்

85A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2017 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*

***எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்***

*2017 செப்டெம்பர் (புரட்டாசி) மாதத்தின் கருப்பொருள்:*

*தன்னலத்தை மிஞ்சிய உருமாற்றத்தை அளிக்கிறது*

***மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்***

***( 1848 – 2018 )***

***பங்கு அலுவலக நேரம்:***

**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** **பொதுக்காலம் (ஆண்டு ஒன்று) 21 ஆம் ஞாயிறு சனி 26-08-2017 ஞாயிறு 03-09-2017**

**எசாயா 22: 19-23 தி.பா 137: 1-2a, 2bc-3, 6, 8bc உரோ 11: 33-36, மத் 16: 13-20**

**ஆண்டவரே ! என்றும் உள்ளது உமது பேரன்பு ( சங் 137 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 26 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. றபேல்) | மாலை 4.30 தித்தி (சீ) (நவநாள் திருப்பலி 2ஆம் நாள்) |
| ஞாயிறு | 27 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் (திருஇருதய ஆண்டவர்–மார்ஜெரி)<br>திருப்பலி ஆங்கிலம் (பு. டேவிட்)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ)<br>மாலை 4.30 தித்தி (சீ) திருவிழா திருப்லி<br>மாலை 7.00 க.செபீர் (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 28 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 29 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 30 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 31 | *60வது சுதந்திர தின கொண்டாட்டம் : காலை 8.30 செபமாலை, நவநாள் தொடர்ந்து திருப்பலி, தேசத்துக்காக செபிப்போம், அனைவரும் வருக* | | |
| வெள் | 01 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி, கொடியேற்றலும் திருப்பலியும் - அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் - காடோங்* |

**பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு : ( ஆண்டு ஒன்று)**

**எரே 20: 7-9 தி.பா 62: 2, 3-4, 5-6, 8-9 உரோ 12: 1-2, மத் 16: 21-27**

**கடவுளே ! என் உயிர் உம்மீது தாகம் கொண்டுள்ளது. ( சங் 62 )**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 02 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (பு. மார்த்தா) | |
| ஞாயி று | 03 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>1.00 ம | திருப்பலி தமிழ் (ம.கல்வி – ஆரம்பபள்ளி)<br>திருப்பலி ஆங்கிலம் (ம.கல்வி – ஆரம்பபள்ளி)<br>திருப்பலி சீனமொழி<br>திருப்பலி (தே.மொ) | மறைக்கல்வி (த) காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ( முகிபுவ )**<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2017 ஆகஸ்டு (ஆவணி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

1) **ஆலய காணிக்கை:**
   - **அ) 19 / 20 ஆகஸ்டு 2017 காணிக்கை : ரிம.8,432.50**
   - **ஆ) அன்னையின் விண்ணேற்பு 15/8 : ரி.ம 2,851.10 தித்தி ரி.ம 54.00**

   இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

2) மறைக்கல்வி மாதம் : ஞாயிற்றுக்கிழமைகளின் திருப்பலிகளுக்கான அட்டவணை. அனைத்து மொழி
   03-09-2017 – ஆரம்பப் பள்ளி மாணவாகள்
   17-09-2017- இடைநிலைப்பள்ளி மாணவர்கள்
   17-09-2017– மறைக்கல்வி ஆசிரியர்கள்

3) **170ஆம் ஆண்டு நிறைவையொட்டி விழாக் குழுவினரின் கூட்டம்** 10-09-2017 இரவு 7.30 மணிக்கு விவிலிய அறையில் நடைபெறும்

4) **மலேசிய சுதந்திர தினத்தை** முன்னிட்டு ஆகஸ்ட் 31, மற்றும் செப்டம்பர் 16 ஆகிய தேதிகளில் பங்கு அலுவலத்திற்கு விடுமுறை

- **சதுரங்க போட்டி** - மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் கம்போங் பாசீர்குழந்தை இயேசு சபையின் சகோதரிகள் இணைந்து நடத்தும் நிகழ்வு:
  தொடர்பு: அருட்சகோதரி: திரேச சுவா (06-7655099)
  அந்தோணி பரம் (012 662 0949)

- **கோமேட் 2** - இந்த நிகழ்வில் நிகழ்ச்சிகளைப் படைக்க இருப்பவர்களுக்கான தேர்வு ஆகஸ்ட் 27 பகல் 1 - 3 வரை ஆலய மண்டபத்தில் நடைபெற இருக்கிறது. அனைத்து வயதினரும், மற்றும் பணிக்குழுவினரும் உங்களுடைய படைப்புகளைத் தர வரவேற்கப்படுகிறார்கள். ஒவ்வொரு முன்னோட்டமும் 3 - 5 நிமிடங்களுக்குள்ளாக இருக்க வேண்டும். தொடர்புக்கு: ஸ்டேஃபான் (017-615 9199)

- **காடோங் அன்னை வேளாங்கண்ணி திருவிழா (செப் 1 - செப் 10 வரை)** செப் 1 மாலை 7.30 மணிக்கு கொடியேற்றம், திருமணி ஆராதனை, தொடர்ந்த் திருப்பலி

- அருள்திரு. செல்வராஜ் இந்தியா செங்கல்பட்டு மறைமாவட்டத்திலிருந்து நம்முடைய பங்குக்கு செப்டம்பர் 2 - 17 வரை தங்கியிருப்பார். அவரை நாம் வரவேற்போம்

- **மலேசிய கொடியைச் செய்வோம்: 2017 ஆம் ஆண்டின் சுதந்திரதினம் ,** கோ மேட் 2 மற்றும் மலேசிய தினம் ஆகியவற்றை கொண்டாடிக்கொண்டு இருக்கும் இவ்வேளையில் கூடுதலாக மலேசிய கொடியைத் உருவாக்குவதில் நாம் அனைவரும் பங்கு பெறுவோம். கார் நிறுத்தும் இடத்தில் நம் இளைஞர்கள் இதற்காக தயாராய் இருப்பார்கள். இதில் அனைவரும் ஆர்வத்தோடு கலந்து கொள்ள அழைக்கப்படுகின்றீர்கள்.

- **மெர்டேக்கா 2017 - 31ஆகஸ்ட் ( சுதந்திர தினத்தின் 60 ஆம் ஆண்டு கொண்டாட்டம்)**
  ~ காலை 8.30 செபமாலை & நவநாள். காலை 9.00 மணி திருப்பலி
  ~ அனைத்து அதிச/வட்டாரங்கள் தனிப்பட்ட செப வழிபாடுகள், ஒற்றுமைக்காக, கலந்துரையாடல், நிகழ்ச்சிகள் மற்றும் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் விதங்களில் தங்கள் வட்டாரங்களில் நிகழ்த்த அழைக்கப்படுகிறார்கள்.
  ~அனைத்து இல்லங்களிலும் மலேசிய கொடியைப் பறக்க விடுவோம்
  ~குடிமகனாக நான்/நாம் எவ்வாறு நாட்டுக்கும் சமுதாயத்திற்கும் ஒற்றுமையை ஊக்குவிக்கவும், பாலம் அமைக்கவும் ஒரு பங்காளியாக திகழ முடியும்?

- **மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டு நிறைவை நோக்கி:**
  - **கோ மேட் 2: செப்டம்பர் 16, (மலேசிய தினம்)** காலை 8.00 எ 4.00 வரை
    அன்றைய தினம் நிக்ழ்ச்சி மாலை 6.00 மணி திருப்பலியோடு நிறைவு பெறும். அனைத்து பங்கு மக்களும் முழு ஆதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம். கோ மேட் 2 க்கான கூப்பன்கள் விற்பனைக்கு உள்ளன (கோ மேட் 2 தொடர்பான கூட்டங்கள் ஒவ்வொரு ஞாயிறும் மாலை 5.00 மணிக்கு விவிலிய அறையில் நடைபெறும். அனைத்து இளைஞர்களையும் கலந்து கொள்ள அழைக்கிறோம்.
  - **நடனத்துடன் கூடிய விருந்து:மலேசிய தினம்: செப்டம்பர் 21 (வியாழன்)** பொதுவிடுமுறைக்கு முந்திய நாள். பங்கு மக்கள் அனைவரையும் இதில் கலந்து முழு ஆதரவு தருமாறு அ ழைக்கிறோம். டிக்கெட்டுகள் விற்பனைக்கு உள்ளன. திருப்பலிகளுக்குப் பின் ஆலய வளாகத்தில் மற்றும் அதிச/ சோன் பொறுப்பாளர்களிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம். தொடர்புக்கு ஜெரோம்: 019-7908071
  - **அனைத்து அதிச/சோன் பொறுப்பாளர்களை அழைக்கிறோம்.** நடனத்துடன் கூடிய விருந்து மற்றும் கோ மேட் டிக்கெட்டுகளை விற்பனை செய்ய அழைக்கிறோம். நண்பர்கள், அதிச வில் உள்ள பிற சமயத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் அழையுங்கள்.

- இல்ல சந்திப்பு: அருள்திரு ஜோர்ஜ் ஹாரிசன்: சோன் 9 -அதிச புனித மார்த்தா - 29-08-2017(செவ்வாய்) இரவு 8.00 மணி
- குருக்களின் ஆண்டு தியானத்திற்காக நம்முடைய குருக்கள் செல்லவிருக்கிறார்கள். அவர்களை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.
  அருள்திரு. ஜோர்ஜ் ஹாரிசன்: 03-09-2017 - 08-09-2017
  அருள் திரு. அண்ட்ரூ கூய் 10-09-2017 - 15-09-2017
- அன்னை மரியாளின் பிறந்த நாள்:08-09-2017 மாலை 7.30 மணி செபமாலை/நவநாள்/ நற்கருணை ஆராதனை/திருப்பலி
- அருள்திரு. மரி ஆரோக்கியம் அவர்களின் குருத்துவ 25 ஆம் ஆண்டு நிறைவு: 08-09-2017(வெள்ளி) மாலை 6.30 மணிக்கு பெட்டாலிங் ஜெயா விண்ணேற்ற ஆலயத்தில் நடைபெறும். 09-09-2017 (சனி) காலை 10.30 மணிக்கு கம்போங் பண்டான் ஆரோக்கிய அன்னை சிற்றாலயத்தில் திருப்பலி நடைபெறும். இவரை நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம்.
- **லூத்தரன் திருச்சபையின் 500 ஆம் ஆண்டு நிறைவு கொண்டாட்டம்: முரண்பாட்டிலிருந்து ஒன்றிப்பு** - மாநாடு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் நடைபெறுகிறது. நாள்: 22-09-2017 (வெள்ளி) பொது விடுமுறை நாள்: காலை 9- 4 வரை (ஆங்கிலம்)
  மாண்டரின் 23-09-2017(சனி) காலை 9-1 வரை (லூத்தரன் செண்டர், பெட்டாலிங் ஜெயா) தொடர்புக்கு: கிறிஸ்டோபர் கே.(019-6126194)
- குடியேற்றவாசிகளின் ஞாயிறு: 24-09-2017 காலை திருப்பலி கருப்பொருள்: குழந்தை குடியேற்றவாசிகள் பாதிப்புக்குள்ளானவர்கள் / குரலெழுப்பமுடியாதவர்கள்
- **சோய்ஸ்: 100 கோலாலம்பூர் (ஆங்கிலம்)** 23-40 வயதுவரை உள்ள திருமணமாகாத இளைஞர்களை அழைக்கிறோம். நாள்: 22-24 செப்டம்பர் 2017 நடைபெறும் இடம் APC கோலாலம்பூர் தொடர்புக்கு: அண்ட்ரூ (016-3366050) அஷ்லி (017-3310275) அல்லது www.choicekl.org காணுங்கள்